**கவனிக்க.-** 2009.05.15 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1603 - 2009 මැයි 22 වැනි සිකුරාදා - 2009.05.22

1603 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 598 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 601 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009 மே மாதம் 29 ஆந் திகதி பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, மே மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## மதுவரி திணைக்களம்

*பங்களா காவலாளர் பதவி*

*மதுவரி திணைக்களத்தின் திசமகராம பங்களா காவலாளர் பதவிக்கு தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் இலங்கை பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.*

*2. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கிணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 15 ஆந் திகதி ஆனி மாதம் 2009 ஆம் ஆண்டு அன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கும்படி மதுவரி ஆணையாளர் நாயகம், மதுவரி திணைக்களம், இல. 28, ஸ்டேபல் வீதி, கொழும்பு - 02 என விலாசமிடப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பங்களா காவலாளர் பதவி'' என குறிப்பிட வேண்டும். சரியான முறைப்படி பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். அனுப்பும் விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெற்றது என அறிவிக்கப்படமாட்டாது.*

*3. **சம்பளத்திட்டம்**.- பதவிக்கான திரட்டிய ஆண்டுச் சம்பளம் ரூபா 11,730-100×10-120×10 - 130×10-16,590 ரூபா 12,000 சம்பளப் படிக்கு முன்னதாக தகுதிகாண் தடைப்பரீட்சை உள்ளடக்கியதாகும்.*

*4. **வயது எல்லை**.- அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிட்ட விண்ணப்ப முடிவுத் திகதியில் இருந்து 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவம் இருத்தல் வேண்டும். அரச/உள்ளூராட்சி சேவையில் உள்ளோருக்கும் வயதெல்லை ஏற்புடையதன்று.*

5. ***கல்வி மற்றும் தராதரங்கள்***.-

I. *விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.*

II. *தரம் 8 அல்லது வருடம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சையில் சித்தியெய்தியவராக இருத்தல் வேண்டும்.*

III. *கீழைத்தேய, மேலைத்தேய சமையல் கலையில் விசேட அறிவும், அனுபவமும் பெற்றவராக இருத்தல் வேண்டும். வாடி வீடுகளில் அல்லது அதே தரத்தில் உள்ள உணவு விடுதிகளில் உணவு தயாரித்த அனுபவமும், விசேட அதிதிகள் தங்கும் விடுதி, வரவேற்பு மண்டபங்களில் சமையல் அறைகளில் முகாமைத்துவ அனுபவம் பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும் விண்ணப்பதாரர் இதே துறையில் 3 வருடங்கள். அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் பணிபுரிந்த அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.*

IV. *ஆங்கிலம் அல்லது தமிழ் மொழிகளில் தேர்ச்சி பெற்று இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.*

*6. **சேவை ஏற்பாடு**.- மேற்கூறப்பட்ட 4 ஆம் 5 ஆம் பகுதிகளுக்கு அமைய தகைமை உடைய விண்ணப்பதாரிகள் அவர்களது தொழில் ஆற்றல்களை கணிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டும். நேர்முகப் பரீட்சையில் பின்வரும் முறையில் புள்ளிகள் வழங்கப்படும் :-*

| | |
|---|---|
| *மேலதிக கல்வித் தகைமைகளுக்கு உரிய புள்ளிகள்* | *40* |
| *ஆங்கில மொழியில் பேசும் வல்லமைக்கு* | *15* |
| *தமிழ் மொழியில் பேசும் வல்லமைக்கு* | *15* |
| *பரீட்சைகளும்/அனுபவங்களும்* | *30* |
| | *100* |

*இத்திணைக்களத்தின் நிரந்தர சேவை புரிபவர்களாயும் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டவர்களாயும் உள்ளோர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை தமது உயர் அதிகாரிகள் ஊடாக அனுப்பிவைக்கலாம்.*

*7. **சேவை நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் நிதியத்துக்கு உதவுதொகை செலுத்தல் வேண்டும்.*

*8. **சேவை நிபந்தனைகள்**.- இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) வின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள ''அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்'' பால் சகல விண்ணப்பதாரிகளதும் கவனம் கோரப்படுகின்றது.*

*9. விண்ணப்பதாரிகள், தமது விண்ணப்பங்களுடன் கீழ்குறிப் பிடப்படும் ஆவணங்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளை அல்ல) இணைத்தனுப்புதல் வேண்டும் :-*

(i) *பிறப்புச் சான்றிதழ் ;*
(ii) *சமீபத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றுப் பத்திரங்கள் இரண்டு. இதில் ஒன்று, தமது பகுதி கிராம உத்தியோகத்தரிட மிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;*
(iii) *கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;*
(iv) *விசேட தகைமைகள் மற்றும் அனுபவங்களுக்கு ஆதாரமான சான்றுப்பத்திரங்கள் (நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்ப தாரிகள் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டு அழைக்கப்படுவர். இந்நோக்கத்தின் பொருட்டு பிரயாண செலவுக் கொடுப் பனவு வழங்கப்படமாட்டாது).*

டீ. ஜீ. எம். வி. ஹபுஆரச்சி,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**மதுவரி திணைக்களம்**

*பங்களா காவலாளர் பதவி*

1. *முழுப் பெயர் :----.*
2. *தேசிய அடையாள அட்டை இல. :----.*
3. *தற்போதைய முகவரி :---.*
4. *நிரந்தர முகவரி :----.*
5. *தேசிய இனம் :----.*
6. *பிறப்பால் இலங்கைப் பிரஜையா? அல்லது பதிவினாலா? :----.*
*(பதிவால் இருந்தால் அத்தாட்சிப் பத்திரம் இணைக்கவும்)*

7. பிறந்த திகதி :----.

8. வர்த்தமானியின் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பம் பெறும் முடிவுத்திகதியில் வயது :----.

9. கல்வித் தகைமைகள் :----.
(பரீட்சை சான்றிதழ்கள் இணைக்கவும்)

10. வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட (5) (6) பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் :----.

11. உங்களைப் பற்றிய விபரங்கள் தரக்கூடிய இரு முக்கியஸ்தர்களின் பெயர்களும் முகவரிகளும் :-

(I) ----.
(II) ----.

12.நீங்கள் அரச/ உள்ளூராட்சிச் சேவையில் முன்னர் பதவி வகித்திருந்தால் விபரங்களை தருக :----.

என்னால் மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதும், சரியானதும் என உறுதிப்படுத்து கிறேன். இந்த விபரங்கள் பொய்யானதும், பிழையானதும் என சேவைக்கு அமர்த்தப்பட்ட பின்னர் அறியப்பட்டால் எந்தவித நட்டஈடுகளும் இன்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்று நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5-435

---

## உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு
## தகவல் உத்தியோகத்தர் பதவி

இந்த அமைச்சில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு தகைமை பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

I. **சம்பளத் தொகுதியும் சம்பளத்திட்டமும்.**- பொ. நி. சு. இல. 06/2006 (iv) இற்கு அமைய MN-4-2006-A இன் ஆரம்ப நிலை மாதாந்த திரண்ட சம்பளம் :

ரூபா 15,215-10×215-4×240-7×320-15×360-ரூ. 25,965 ஆகும். இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

II. **வயதெல்லை.**- இப்பதவிக்கு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதன்று.

III. **கல்வித் தகைமைகள்.**-

(அ) 1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

2. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் ஊடகத்துறையில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

(ஆ) பத்திரிகை நிறுவனமொன்றில் அல்லது அரசாங்க அல்லது கூட்டுத்தாபனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் செய்தி மற்றும் தகவல் பதவி அணியில் குறித்த துறையில் சேவையாற்றி 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ் மூலம் உறுதி செய்திருத்தல் வேண்டும்.)

IV. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவை, அநாதை ஓய்வூதிய நிதியத்துக்கு/தபுதாரர் அநாதை ஓய்வூதிய திட்டத்துக்கு பங்களிப்பு நிதி செலுத்துவதற்கு நீங்கள் உட்பட்டிருத்தல் வேண்டும்.

V. **ஆட்சேர்ப்பு முறை.**- விண்ணப்பதாரர்கள் முறையான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதுடன், நேர்முகப் பரீட்சையில் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். முறையான நேர்முகப் பரீட்சைச் சபையின் புள்ளி வழங்கும் ஒழுங்குமுறை பின்வருமாறு :

1. இப் பகுதிக்கு வழங்கப்படும் உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை - 20 புள்ளி

(i) வெகுசனத் தொடர்பு சாதனம் பற்றிய விஷேட பட்டத்தைப் பெற்றிருத்தல்

(அ) முதலாம் வகுப்பு சித்தியைப் பெற்றிருத்தல் - 20 புள்ளி

(ஆ) இரண்டாம் மேற்தர சித்தியைப் பெற்றிருத்தல் - 15 புள்ளி

(இ) இரண்டாம் கீழ்நிலை சித்தியைப் பெற்றிருத்தல் - 12 புள்ளி

(ஈ) சாதாரண சித்தி (அடிப்படைத் தகைமைக்கான அங்கீகரிக்கப்பட்ட பட்டம் இல்லையாயின்) - 10 புள்ளி

(ii) வெகுசனத் தொடர்பு சாதனம் பற்றிய விஷேட பட்டத்தைப் பெற்றிருத்தல்

(அ) முதலாம் வகுப்பு சித்தியைப் பெற்றிருத்தல் - 15 புள்ளி

(ஆ) இரண்டாம் மேற்தர சித்தியைப் பெற்றிருத்தல் - 12 புள்ளி

(இ) இரண்டாம் கீழ்நிலை சித்தியைப் பெற்றிருத்தல் - 10 புள்ளி

(ஈ) சாதாரண சித்தி (அடிப்படைத் தகைமைக்கான அங்கீகரிக்கப்பட்ட பட்டம் இல்லையாயின்) - 08 புள்ளி

(iii) மேலே i, ii இன் பட்டங்களைத் தவிர்த்து வேறு பட்டங்களுக்கு :

(அ) அடிப்படை தகைமைக்கான அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றை முதற்தர சித்தியுடன் பெற்றிருத்தல் - 05புள்ளி

(ஆ) அடிப்படை தகைமைக்கான அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றை இரண்டாம் மேற்தர சித்தியுடன் பெற்றிருத்தல் - 03 புள்ளி

(இ) அடிப்படை தகைமைக்கான அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றை இரண்டாவது கீழ் நிலை சித்தியுடன் பெற்றிருத்தல் - 01 புள்ளி

2. இப்பகுதிக்கு வழங்கும் உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை - 20 புள்ளி

(I) அடிப்படைக் கல்வித் தகைமைக்கு மேலதிகமாக வெகுசனத் தொடர்பு சாதனம் பற்றிய பட்டப்பின் படிப்பைப் பூர்த்தி செய்திருத்தல் - 20 புள்ளி

(II) அடிப்படைக் கல்வித் தகைமைக்கு வேறு பட்டப் பின் படிப்பைப் பூர்த்தி செய்திருத்தல் - 20 புள்ளி

(III) அடிப்படைக் கல்வித் தகைமைக்கு மேலதிகமாக வெகுசனத் தொடர்பு சாதனம் பற்றிய பட்டப்பின் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் - 10 புள்ளி

(IV) அடிப்படைக் கல்வித் தகைமைக்கு மேலதிகமாக வேறு பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் - 05 புள்ளி

(மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின்படிப்பு/ பட்டப்பின் டிப்ளோமாவின் கற்கை காலம் ஒரு வருடம் அல்லது அதற்கு மேலானதாக இருத்தல் வேண்டும்.)

3. செய்திப் பத்திரிகை நிறுவனம் ஒன்றில் அல்லது அரச அல்லது கூட்டுத்தாபனம் அல்லது அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் செய்தி மற்றும் தகவல் பதவி அணியில் குறித்த துறையில் சேவையில் ஈடுபட்டிருப்பின் மூன்று (03) வருடங்களுக்கு மேலதிகமாக உள்ள பூர்த்தியான ஒவ்வொரு வருடத்துக்கு 05 புள்ளி வீதம் உச்ச புள்ளிகள் - 30 புள்ளி

4. மின்னியல் அல்லது அச்சு ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ள சுய ஆக்கங்களுக்காக ஒவ்வொரு ஆக்கத்துக்கும் 01 புள்ளி வீதம் உச்சளவாக. (ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்களின் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.) - 20 புள்ளி

5. நேர்முகப் பரீட்சை சபையினால் நேர்முகப் பரீட்சையின் போது வழங்கும் உச்ச புள்ளிகள் - 10 புள்ளி
(அதன் ஒழுங்கமைப்பு பின்வருமாறு)

(I) ஊடக நேர்காணல் ஒன்றை வழிநடாத்தும் ஆற்றல் - 05 புள்ளி

(II) ஊடக அறிவித்தல்களை வெளியிடும் ஆற்றல் - 05 புள்ளி

**கவனத்திற்கொள்க** .- தற்போது அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை குறித்த திணைக்கள தலைவரினூடாக அனுப்ப வேண்டும். மேலேயுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் முழுப் பெயர், முகவரி, வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை பூர்த்தி செய்து சுயமாகத் தயார் செய்துகொள்ளும் விண்ணப்பப்படிவங்களை 2009.06.19 ஆந் திகதிக்கு முன்னர், ''செயலாளர், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு, இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02'' எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

எச். பீ. கெஷியன் ஹேரத்,
செயலாளர்.

உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சு,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.

5-508

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு

*துணை மருத்துவ துறையில் தொழிற் பயிற்சிக்கு மாணவர்கள் ஆட்சேர்ப்பு - 2009*

*துணை மருத்துவ துறையில் தொழில்சார் சிகிச்சையாளர் பயிற்சிக்கு தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. 2001 தொடக்கம் 2006 வரையான காலப்பகுதிக்குட்பட்ட கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை (உயர்தரம்) முடிவுகளின்* Z *- புள்ளிகளின் அடிப்படையில் தகுதியுடையவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.*

*2. மேற்படி பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்பு செய்யமுடியுமான தொகைக்கு ஏற்ப மாவட்டத்திலுள்ள சனத்தொகை சதவீத அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.*

*3. இது ஒரு முழுநேரப் பயிற்சிநெறியாகையால் வாரத்தில் 5 வேலை நாட்களிலும் சனிக்கிழமை காலையிலும் வேறு பயிற்சிநெறிகளைத் தொடர்பவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.*

*4. பயிற்சிநெறியும் பயிற்சிக்கான காலமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :-*

| *குறியீட்டு இல.* | *பயிற்சி நெறி* | *பயிற்சிக்கான காலம்* |
|---|---|---|
| *01* | *தொழில்சார் சிகிச்சையாளர்* | *02 வருடங்கள்* |

*3.* ***கல்வித் தகைமைகள்*** *.- பரீட்சார்த்தி கண்டிப்பாக க. பொ. த. (உயர்தரம்) 2001 தொடக்கம் 2006 காலப்பகுதிக்குள் விஞ்ஞான பிரிவில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியும் இந்தப் பயிற்சிநெறிக்குக் கேட்கப்படும் பாடத்தில் திறமைச்சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். இப்பயிற்சிநெறிக்குத் தேவையான தகைமைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.*

| *குறியீட்டு இல.* | *பயிற்சி நெறி* | *க.பொ.த. (உயர்தரம்) தகைமைகள்* | *க.பொ.த. (சாதாரணம்) தகைமைகள்* |
|---|---|---|---|
| *01* | *தொழில்சார் சிகிச்சையாளர்* (Occupational Therapist) | *க.பொ.த.(உயர்தரம்) பரீட்சையில்*<br>*பௌதிகவியலில் திறமைச்சித்தியும் அத்துடன் கீழ்வருவனவற்றில் இரண்டு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியும் வேண்டும். இணைந்த கணிதம், இரசாயணவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம்* | *க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில்*<br>*சிங்களம்/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுடன் ஆங்கிலமொழி உட்பட ஆறு பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தியடைந்திருத்தல்* |

*6.* ***ஏனைய தகைமைகள்*** *.- (அ) 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் 30.06.2009 இல் இருக்க வேண்டும்.*

*(ஆ) நாட்டின் எப்பகுதியிலும் சேவை புரிய சம்மதிக்க வேண்டும்.*

*(இ) சிறந்த தேகாரோக்கியமும் சுகதேகியாகவும் இருக்கவேண்டும்.*

*(ஈ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் தொடர்ந்து 3 வருடங்களாவது வசித்துவருபவராக இருக்க வேண்டும்.*

*7.* ***விண்ணப்பிக்கும் முறை*** *.- (அ) இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப்படிவம் தயாரித்து "முத்திரைக் கூண்டில்" ரூபா 500/- பெறுமதியான முத்திரை ஒட்டி அதன் மேல் கையொப்பம் இடுவதன் மூலம் அதை செல்லுபடியற்றதாக்க வேண்டும் ;*

*(ஆ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/கல்விச்சேவை/அரச கணக்காளர்சேவை/அரச பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி மற்றும் வருடாந்த சம்பளம் 2,40,360 க்குக் குறையாத அரசாங்க உத்தியோகத்தர் ஆகியவர்களில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.*

*(இ) முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு, "சுவசிரிபாய", இல. 385, வண. பத்தேகம விமலவம்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு 30.06.2009 இற்கு முன்னர் கிடைக்கும்படி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கும் பயிற்சிக்குரிய பெயர்" எழுதப்பட வேண்டும்.*

8. விண்ணப்பதாரர் அரச அல்லது அரசுசார்ந்த நிறுவனங்களில் தொழில் புரிந்தால் அவர் தனது திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்படமாட்டாது.

10. முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. மேற்குறிப்பிட்ட தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகளுடன் விண்ணப்பித்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அவர்கள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும். அவற்றை சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் அவருக்கான நேர்முகப் பரீட்சை இரத்துச்செய்யப்படும்.-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) கல்விச்சான்றிதழ் மூலப்பிரதிகள், மூலப்பிரதிகள் இல்லாதவிடத்து வெளிவாரி பரீட்சார்த்தி என்றால் பரீட்சார்த்திகளுக்குக் கொடுக்கப்பட்ட பெறுபேறு படிவங்கள் அல்லது பாடசாலை பரீட்சை அமர்வு என்றால் குறித்த பாடசாலை அதிபர்களினால் கொடுக்கப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி.

(iii) பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க. பொ. த. (உ/த) பரீட்சை Z-புள்ளிகள் அளவு குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழ்.

(iv) தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திரம்.

(v) விண்ணப்பதாரர் 3 ஆண்டுகள் இம்மாவட்டத்தில் தொடர்ந்து வசிப்பதற்கான கிராம அலுவலரின் சான்றிதழ் பிரதேச செயலாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

13. **பயிற்சித்திட்டம்**.- (i) தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் பந்தி 04 இல் குறிப்பிட்டபடி பயிற்சிநெறிக்காக பயிற்சிப் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவர். பயிற்சியாளர்களுக்கு ஆங்கில மொழியில் பயிற்சிகள் வழங்கப்படும் ;

(ii) பயிலுநர்கள் பயிற்சிப்பாடசாலையின் மற்றும் சுகாதார திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் சட்ட ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்படவேண்டும் ;

(iii) பயிற்சிக்காலப்பகுதியில் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் அல்லது அவரின் செயற்பாடுகள் நடத்தைகளில் அதிருப்தி கண்டால் அல்லது பரீட்சை மற்றும் விடுமுறை நிபந்தனைகளைப் பின்பற்றாவிடில் நஷ்டஈடு எதுவும் செலுத்தாமல் எச்சந்தர்ப்பத்திலும் பயிலுநர்களின் பயிற்சி நிறுத்தப்படும்.

(iv) இப்பயிற்சிக் காலத்தில் பயிலுநர்களுக்கு கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 6,000 வழங்கப்படும்.

(v) பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும்போது பயிலுநரானவர், பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதாகவும் பயிற்சியின்போது அதனை விட்டு விலகமாட்டேன் எனவும், பயிற்சியின் பின் சுகாதார திணைக்கள சேவையில் நியமனம் வழங்கப்படின் ஆகக்குறைந்தது 10 வருடங்கள் சேவையாற்றுவேன் எனவும் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும். பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது தொடரமுடியாவிடின் அல்லது 13(III) இல் உள்ளவாறு பயிற்சியிலிருந்து நீக்கப்பட நேர்ந்தால் பயிற்சிக்காலத்தின்போது அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகளையும் பயிற்சி நெறிக்காக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவுகளையும் சுகாதாரத் திணைக்களத்திற்கு மீள் செலுத்தவேண்டும். இல்லாவிடின், ஒப்பந்தத்தின் பிரகாரம் அவற்றை மீளப் பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்ளும்.

14. **சேவைக்கு அமர்த்தல் விதிகள்**.- பயிற்சிநெறி முடிவில் நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு திணைக்களம் கட்டுப்படவில்லை. எவ்வாறாயினும் இறுதிப் பரீட்சையில் சிததிபெறும் பயிலுநர்களுக்கு அடிப்படையில் குறிப்பிட்ட சேவையின் தரம் III க்கான நியமனங்கள் அவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் நாட்டின் எப்பகுதியிலுமுள்ள வெற்றிடங்களைப் பொறுத்து நியமனங்கள் வழங்கப்படும்.

15. விண்ணப்பங்கள் நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் நிரப்பவும். பயிற்சிகளின் போதோ அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்படின் பயிற்சியிலிருந்து/சேவையிலிருந்து இடைநிறுத்தப்படவோ அல்லது விலக்குவதற்கும் மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறு கறுப்புப்பட்டியில் பெயரை சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

16. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் குறிப்பிட்ட பயிற்சியையேற்றதும் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையினை மேற்கொள்ள தமது உடல் மற்றும் உளத் தகுதியினை நிரூபிப்பதற்கான மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதியற்றவர் பயிற்சியைத் தொடர்வதற்கு தகுதியற்றவராவார்.

17. இதன்படி தெரிவுசெய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் விதிகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கொள்கை அமுலாக்கலுக்கு ஏற்பவும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் காலத்துக்குக் காலம் ஏற்படுத்தும் அரச சட்ட ஒழுங்கு மாற்றங்களுக்குக் கீழ்ப்படிவாக செயற்பட வேண்டும்.

18. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சி நெறிக்காக சேர்த்துக்கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

(வைத்திய கலாநிதி) எச். ஏ. பீ. கஹந்த லியனகே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும்
போஷணை அமைச்சு.

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
04.05.2009.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு**

துணை மருத்துவ நிபுணத்துவ துறையில் தொழிற்பயிற்சிக்கு மாணவர்கள் ஆட்சேர்ப்பு - 2009"

விண்ணப்பிக்கும் பயிற்சி நெறி .................

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (இ) முழுப்பெயர் சிங்களம்/தமிழ் :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

3. தபால் முகவரி :-

| | (தமிழில்) | (ஆங்கிலத்தில்) |
|---|---|---|
| | ....................... | ........................ |
| | ....................... | ........................ |
| | ....................... | ........................ |

4. (அ) நிரந்தர முகவரி :

| | (தமிழில்) | (ஆங்கிலத்தில்) |
|---|---|---|
| | ....................... | ........................ |
| | ....................... | ........................ |
| | ....................... | ........................ |

   (ஆ) மாவட்டம் :----.
   (இ) மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையவரா? (ஆம்/இல்லை) :----.
   (ஈ) ஆம் எனில் எவ்வளவு காலம் :----.

5. பிறந்த திகதி :- ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
   2009.06.30 ஆந் திகதியன்று வயது :- வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. ஆண்/பெண் (உரிய கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

7. நீங்கள் இலங்கைப் பிரசையா? (உரிய கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

8. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :----.
9. கல்வித்தகைமை :-
(அ) க. பொ. த. (உ/த) பரீட்சை (விஞ்ஞான பிரிவு மட்டும்)
(தயவு செய்து புள்ளிவிபரங்களை இணைக்கவும்)

பரீட்சைக்கு தோற்றிய மாவட்டம் :----.
ஆண்டு :----.
சுட்டெண் :----.
Z-புள்ளி :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 01.<br>02.<br>03.<br>04. | |

(ஆ) க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை - முதலாம் அமர்வு :
வருடம் :----. சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 01.<br>02.<br>03.<br>04.<br>05. | | 06.<br>07.<br>08.<br>09.<br>10. | |

க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை - இரண்டாம் அமர்வு :
வருடம் :----. சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 01.<br>02.<br>03.<br>04.<br>05. | | 06.<br>07.<br>08.<br>09.<br>10. | |

11. ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா? :----.
(உரிய கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

ஆம் எனில் தயவு செய்து காரணத்தை குறிப்பிடுக :-
-----
-----

12. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) எனது அறிவிற்கு அமைய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிமொழிவதுடன் தற்போது முழுநேரப் பாடநெறிகள் எதிலும் ஈடுபடவில்லை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் இத்துடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது போலியானவை எனக் கண்டால் நான் தெரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவரென்றும் நியமனம் பெற்ற பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

முத்திரைக்கூடு

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

13. **உறுதிப்படுத்தல்.-**
விண்ணப்பதாரர் திரு./திருமதி/செல்வி ............................................. எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ........... 2009 ஆந் திகதி இட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் விபரம் :

முழுப்பெயர் :----.

பதவி :----.

முகவரி :----.

(அலுவலக முத்திரையுடன்)

திகதி :----.

5-367